# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.369/பேரூ/2023
நாள். 04.01.2024

திரு. G. வெங்கடேஷ்,
கச்சிராயப்பாளையம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
வடக்கனந்தல் பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம். .... எதிர்மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், கச்சிராயப்பாளையம், சின்னசேலம், L.F. ரோடு எண் 233 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. G. வெங்கடேஷ், என்பவரது 08.11.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.11.2023 அன்று பெறப்பட்டு, 369/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கள்ளக்குறிச்சி மாவட்டம், கச்சிராயப்பாளையம், சின்னசேலம், L.F. ரோடு எண் 233, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. G. வெங்கடேஷ் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"என் வீட்டின் அருகில் சிவம் சைவ & அசைவ உணவகம் எந்தவித சுகாதார விதிமுறைகளையும் பின்பற்றாமல் உரிமம் இன்றி செயல்பட்டு வருகிறது. இந்த உணவகம் பேரூராட்சியால் அமைக்கப்பட்ட சாக்கடை கால்வாயை ஆக்கிரமித்து செயல்பட்டு வருகிறது. இந்த உணவகத்திற்கு உணவு உண்ணவரும் நபர்கள் அவர்களது இருசக்கர வாகனங்களை என் வீட்டின் முன்பாக நிறுத்தி என் குடும்பத்திற்கு தொல்லை கொடுத்து வருகிறார்கள். மேற்படி உணவகத்தில் தினமும் சமைக்கப்படும் சுகாதராரமற்ற அசைவ உணவுகளால் எழும் துர்நாற்றத்தால் நானும் என் குடும்பத்தாரும் நல்ல காற்றை சுவாசிக்க முடியாமல் அவதிபட்டு வருகிறோம். மேற்படி உணவகத்திலிருந்து தினமும் கழிவுகள் மற்றும் இலைகளை வடக்கனந்தல்

பேரூராட்சி ஊழியர்கள் சட்ட விரோதமாக கையூட்டு பெற்றுக் கொண்டு அகற்றுகிறார்கள். மேலும் மேற்படி உணவகம் வடக்கனந்தல் பேரூராட்சியால் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பை சட்டவிரோதமாக மோட்டார் வைத்து இறைத்து தினமும் வணிக நோக்கத்திற்கு பயன்படுத்தி வருகிறார்கள். இது பற்றி நான் தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலருக்கு கடந்த 30.09.2023 தேதியில் பதிவஞ்சலில் புகார் ஒன்றை அனுப்பி இருந்தேன். அதனை கடந்த 03.10.2023 தேதியில் பெற்றுக் கொண்ட வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் இன்று வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் தன் சட்டப்படியான கடமையை செய்யாமல் தவறியுள்ளார். இவரின் செயலால் நான் மிகுந்த மனஉளைச்சலுக்கும், மனவேதனைக்கும் ஆளாகியுள்ளேன். மேற்படி சிவம் சைவ மற்றும் அசைவ உணவகத்தின் சட்டவிரோதமான செயல்களுக்கு வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் துணைபோய் உள்ளார். மேற்படி உணவகம் எந்தவித உரிமமும் இன்றி செயல்படுகிறது. இதனை அகற்ற எந்தவித நடவடிக்கையும் வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் இதுவரை எடுக்கவில்லை என்பதுடன் இந்த உணவகத்திற்கு எந்தவித அறிவிப்பையும் வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் இதுவரை கொடுக்கவில்லை. என்னுடைய 30.09.2023 தேதியிட்ட புகாரின் மீது எனக்கு அழைப்பாணை அனுப்பி என்னை வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் இதுவரை விசாரிக்கவில்லை. எனவே என்னுடைய 30.09.2023 தேதியிட்ட புகாரின் மீது நடவடிக்கை எடுக்காமல் கடமை தவறிய வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும் வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரின் செயலால் பாதிக்கப்பட்ட எனக்கு தகுந்த இழப்பீடு பெற்றுத் தருமாறும் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை நான் பிராத்திக்கிறேன்

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 11.12.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 14.12.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலருக்கு திரு. ஜி. வெங்கடேஷ் என்பவரின் 30.09.2023 தேதிய புகார் மனு பதிவஞ்சல் வாயிலாக 03.10.2023 அன்று வடக்கனந்தல் பேரூராட்சி அலுவலத்திற்கு வரப்பெற்றது. மேற்படி புகார் மனுவில் மனுதாரரின் வீட்டின் அருகில் சைவம் & அசைவம் உணவகம் உரிமம் இன்றியும், பேரூராட்சி சாக்கடை கால்வாயை ஆக்கிரமித்து செயல்பட்டு வருவதாகவும் உணவகத்திற்கு வரும் நபர்களின் சக்கர வாகனங்கள் மனுதாரரின் வீட்டின் முன் நிறுத்தி தொல்லை தருவதாகவும் பேரூராட்சி ஊழியர்கள் சட்ட விரோதமாக சாப்பாட்டுக் கழிவுகள் மற்றும் இலைகளை அகற்றுவதாகவும் பேரூராட்சி குடிநீர் இணைப்பு சட்ட விரோதமாக மின்மோட்டார் வைத்து பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் வரப்பெற்ற புகார் மனு தொடர்பாக பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் நேரடியாக மேற்படி உணவகத்தில் ஆய்வு செய்து உணவக உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் வரப்பெற்ற மனுவிற்கு மனுதாரர் கோரியுள்ள தகவல்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண். அ1/171/2023 நாள் 30.10.2023 படி பதிவஞ்சல் வாயிலாக பதில் அனுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் பதில் கடிதம் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது. மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள உணவகம் உணவு பாதுகாப்பு துறையின் உரிமம் பெற்று செயல்பட்டு வருகிறது. பேரூராட்சி மழைநீர் வடிகால் மீது ஆக்கிரப்பு செய்து வைக்கப்பட்டிருந்த அடுப்பு (மற்றும்) இரும்புகல் உணவகத்தினுள் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் பேரூராட்சி பகுதியிலுள்ள அனைத்து வணிக நிறுவனங்கள் குடியிருப்புகள் மற்றும் உணவகங்களில் கழிவுகள், குப்பைகள் தினசரி பேரூராட்சி தூய்மைப் பணியாளர்களை கொண்டு எடுத்துச் சென்று, உரத்திடலில் சேகரம் செய்யப்பட்டு வருகிறது. இப்பணியானது பேரூராட்சியின் அன்றாட பொது சுகாதார பணியாகும். மேற்படி உணவகம் அமைந்துள்ள இடத்தின் உரிமையாளர் திரு. க. சங்கர் என்பவரின் பெயரில் முறையாக குடிநீர் இணைப்பு பெறப்பட்டு நடப்பு நிதியாண்டு வரை குடிநீர் கட்டணம் பேரூராட்சியால் வசூலிக்கப்பட்டுள்ளது.

**(4) மனுதாரர் மற்றும் வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரும் 14.12.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.12.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) 14.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகி தனது 8.11.2023 நாளிட்ட புகார் மனுவினை வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.**

**6) வடக்கனந்தல் பேரூராட்சியின் செயல் அலுவலர் 14.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-**

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள கள்ளக்குறிச்சி வடக்கனந்தல் பேரூராட்சி கச்சிராயப்பாளையம், எல் எப் ரோடில் அமைந்துள்ள சிவம் சைவம் மற்றும் அசைவ உணவகம், FSSAI யிடமிருந்து உரிமம் பெற்று நடைபெற்று வருகிறது. மேற்கண்ட உணவகம் பேரூராட்சியின் மழைநீர் வடிகால்வாயை ஆக்கிரமிப்பு செய்து அதன் மீது அடுப்பை வைத்து சமையல் செய்யப்பட்டு வந்ததையொட்டி, மேற்கண்ட வடிகால்வாய் மீது வைக்கப்பட்டிருந்த அடுப்பு மற்றும் இரும்புக் கல் ஆகியவை அகற்றப்பட்டுவிட்டன என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் உணவக உரிமையாளர் பெயரில் பேரூராட்சியில் குடிநீர் இணைப்பு பெறப்பட்டுள்ளது. எனினும், மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு பேரூராட்சி குழாயிலிருந்து மோட்டார் பம்ப் அமைத்து தண்ணீர் உறிஞ்சப்படுகின்றதா என ஆய்வு செய்து, அவ்வாறெனில் மேற்கண்ட உணவகத்தின் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள உணவகத்திற்கு வந்து செல்லும் வாகனங்களுக்கு உரிய வாகன நிறுத்துமிடம் ஏற்படுத்திடவும் மேற்கண்ட உணவகத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கான தொழில் வரி, வணிக கட்டிடத்திற்கான சொத்துவரி முறையாக விதிக்கப்படுகின்றனவா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை ஒரு மாத காலத்திற்குள் எடுக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட சாலையிலேயே விறகைக்கொண்டு அடுப்பை எரிக்காமல், உணவகத்தின் உட்புறமே சமையல் செய்திடுமாறும் மேலும் மேற்கண்ட உணவகத்திலிருந்து வெளியேரும்

புகையை, புகைபோக்கியால் வெளியேற்றவும் உணவக உரிமையாளருக்கு தகுந்த உத்தரவுகள் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 14.12.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல்வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், வடக்கனந்தல் பேரூராட்சி செயல்அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கள்ளக்குறிச்சி மாவட்டம் வடக்கனேந்தல் பேரூராட்சியில் தனது வீட்டிற்கு அருகே எவ்வித சுகாதார விதிமுறைகளையும் பின்பற்றாமலும், உரிமம் ஏதும் பெறாமலும் சாக்கடை கால்வாயை ஆக்கிரமிப்பு செய்து உணவகம் ஒன்று செயல்படுகிறது. தனது வீட்டிற்கு பக்கத்திலேயே மேற்கண்ட உணவகம் செயல்படுவதால் அங்கிருந்து வெளியேறும் புகை அங்குள்ள பொதுமக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது என மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் மேற்கண்ட உணவகத்தில் பேரூராட்சியின் குடிநீர் இணைப்பிலிருந்து மோட்டார் அமைத்து தண்ணீர் எடுத்துவருகின்றனர் என்றும் உணவகத்திற்கு வருவோர் அவர்களின் வாகனங்களை தனது வீட்டிற்கு முன்பாக நிறுத்திவிடுகின்றனர். லாரி போன்ற கனரக வாகனங்களும் தனது வீட்டின் முன்புறம் நிறுத்தப்படுவதால், தாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். எனவே, பொதுமக்களுக்கும், தங்களுக்கும் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தும் மேற்கண்ட உணவகத்தை கால்வாயை ஆக்கிரமிப்பு செய்து அதன்மீது நடத்தாமல், அவ்வுணவகத்திற்கு சொந்தமான இடத்திலேயே அதாவது அவ்வுணவகத்தின் உள்ளேயே நடத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை மனுதாரர் திரு. ஜி. வெங்கடேஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

**தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் 1939–ல் அத்தியாயம் IV (CHATER- IV) கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**ABATEMENT OF NUISANCES**

41. Without prejudice to the generality of the definition of the expression " nuisance contained in clause (25) of section 3, the following shall be deemed specifically to be nuisances for the purpose of this Chapter.

(1) any premises in such a state as to be prejudicial to health or a nuisance.

(2) any pond, pool, ditch, gutter, water-course, water-trough latrine, cesspool, drain or ashpit which is so foul or in such a state as to be prejudicial to health or a nuisance.

(3) any animal; kept in such a place or manner as to be prejudicial to health or a nuisance.

(4) any accumulation or deposit of refuse or other matter which is prejudicial to health or a nuisance.

Central Act XXV of 1934

(5) any factory (not being a factory governed by the provisions of the Factories Act.1934), workshop or work-place, which is not provided with sufficient means of ventilation or in which sufficient ventilation is not maintained or which is not kept clean or not kept clean or not kept free from noxious effluvia, or which is so overcrowded while work is carried on as to be prejudicial to the health of those employed therein;

(6) any fireplace or furnace which does not as for as practicable consume the smoke arising from the combustible used therein, and which is used for working engines by steam. Or in any mill, factory, dyehouse, brewery, bake-house or gas-work, or in any manufacturing or trade process whatsoever.

(7) any chimney sending forth smoke in such quantity as to be a nuisance;

(8) any noise, vibration dust, cinders, irritating smell or offensive adour produced by a factory, workshop or workplace which is a nuisance to the neighbourhood.

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 102–ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## License and Fees:

**102 Grant of license**: (1) No person shall carry on any trade or business, in any place whether public or private within the municipal limit without a licence granted by the Commissioner subject to such terms and conditions (and for such period not exceeding three years having regard to the nature of trade or business, as may be prescribed. Such licence may be renewed for a period not exceeding the period for which it was granted).

(2) Every application for the licence shall be made to the Commissioner in such form and in such manner and accompanied by such fee, as may be prescribed.

(3) On receipt of such application, the Commissioner shall, if the application is in order, grant licence.

Provided that the Commissioner may inspect the place which the trade or business is to be carried, if considered necessary.

Provided further that no application for grant of licence shall be refused without giving a reasonable opportunity of being heard.

Provided also that if the application is not disposed of within a period of sixty days from the date of its receipt, the licence applied therein shall be deemed to have been granted on expiry of the said period.

**Explanation** - For the purpose of this Chapter, the expression trade or business shall mean any category of shop, establishment, factory or industry as may be notified by the government from time to time.

**103.** Levy of licence fee and issue of licence card – (1) The council may determine the licence fee subject to such minimum and maximum rates as may be prescribed having regard to the nature of trade or business or any other relevant factors for the grant of licence

(2) The council shall review the licence fees fixed for any trade or business once in three years and shall increase the fee payable relation to such licence subject to the minimum and maximum rate prescribed by the Government.

(3) Every licence shall be issued with a licence card containing all details relating to the said licence and on payment of such fee as may be prescribed.

(4) The Commissioner may suspend or cancel any licence if he is satisfied that any of the provisions of this Act or rules made there-under or the terms and conditions subject to which the licence has been granted, are violated by the licensee.

**தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள் 2023 விதி 289–ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது**

**89. Application for trade licence.** –

(1) No person shall carry on any trade or business mentioned in Schedules I, II or III in any place, whether public or private within the municipal limit without a licence granted the Commissioner.

(2) The fee for issuing under this rule shall be fixed by the council within the minimum and maximum rates of fees specified in schedules I, II, or III.

(3) Every application for the grant of such licence shall be made to the Commissioner in Form 1 together with the fee prescribed by the council and shall be accompanied by the following document.

(a) Identity proof such as Aadhaar Card in the case of individual and Permanent Account Number card or incorporation certificate in the case of body of persons or company.

(b) Lease deed or Rental agreement or latest Property Tax receipt or latest Goods and Services Tax return clearly showing the address of the trade or business for which the licence is applied.

Provided that if the applicant does not have any valid address proof, he shall submit a sworn-in affidavit in Form 17

(c) For applications under Schedule I, Udyam registration Certificate or latest Goods and Services Tax return or Income Tax return to determine the category of enterprise.

Provided that the applicant does not have Udyam registration Certificate or latest Goods and Services Tax return or Income Tax return to determine the category of enterprise.

(4) The owner or occupier of every place for the use of which a licence is required under sub-rule (1)shall apply to the Commissioner for such licence not less than 45 days aqnd not more than 90 days before the place is used for such purpose.

(5) On receipt of an application for the grant of such licence. Where the trade or business relates to Schedules I and II. The Commissioner may, after inspecting the premises in which the trade (or) business is to be carried. If considered necessary, either grant the licence for reasons to be recorded in writing, within sixty days from the date of receipt of the application.

Provided that no licence shall be refused without giving an opportunity of being heard to the applicant.

(6) The licence granted under sub-rule (5), shall be subject to the following terms and conditions, namely:-

(a) The licensee shall comply with the Tamil Nadu Coimbined Development and Building Rules, 2019.

(b) No activity prohibited by any law in force shall be carried out at the licensed prmises.

(c) The Licensee shall cause the flooring of the premises to be paved or otherwise rendered impervious and suitably drained and at all times be maintained in good order and condition.

(d) The premises shall be properly enclosed and provided with suitable gateways and gates.

(e) The Licensee shall cause the premises to be cleaned and prevent any accumulation of filth or refuse therein.

(f) The licensee shall Comply with all the provisions of the Solid waste Management Rules, 2016.

(g) The licensee shall cause part of the internal surface of the walls and ceiling of every building upon the said premises to be whitewashed or painted regularly.

(h) The Licenses shall provide sufficient supply of pure and wholesome drinking water.

(i) The Licensee shall cause such means of ventilation and wholesome drinking water.

(j) An inspection book shall be maintained in the licenced premises. The instructions given in the inspection book shall be carried out within the time specified therein.

(k) Licence issued by the municipality shall be displayed in a prominent place.

(l) The licenses shall install Closed Circuit Television units in the public building in accordance with the Tamil Nadu Combined development and Building Rules. 2019.

(m) The licensee shall provide access to the premises without notice, for inspection by the Commissioner or any Officer authorized by him in this behalf at any time, by day or by night when such premises is being used.

(n) The licensee shall provide suitable covered receptacles suitable place in such premises for the deposit of all refuse matter and shall cause such receptacles to be emptied at least once in every twenty four hours in a hygienic manner.

(o) No product banned by the Government, shall be displayed or exposed for sale or use to the customers.

(p) Fire safety norms shall be followed as prescribed.

(q) The licensee shall cause every part of the structure of every latrine and water closet in such premises to be maintained at all times, in good order and every part of the apparatus of such latrine or water closet and every drain or means of drainage leading there from to be maintained, at all times, in good order and efficient action.

(r) The licensee shall cause such premises to be thoroughly swept, washed and cleansed at least once in every 24 hours and shall prevent any accumulation of filth or refuse therein except in the covered reetacles.

(s)The licensee shall, at all times take suitable steps to keep every building in such premises free from rats or other rodents.

(t) No person suffering from an infections or contagious disease shall carry on the business and no licensee shall employ any such person to assist him in carrying on the business.

(u)The licenses, immediately on knowing that any person in the premises is suffering from any infectious, contagious or dangerous disease, adopt such precautions as may be necessary to prevent the spread of infection and inform the public health offricer of the municipality.

தமிழ்நாடு சுகாதார சட்டம் 1939, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 & தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள் 2023ன் தெவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள சிவம் சைவம் & அசைவம் உணவகம் செயல்படுவதற்கு வடக்கனந்தல் பேரூராட்சியிடம் முறையாக உரிமம் பெறாமல் நடைபெற்று வருகிறது என தெரியவருகிறது.

மேலும் வடக்கனந்தல் பேரூராட்சி, செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு பேரூராட்சி குழாயிலிருந்து மோட்டார் பம்ப் அமைத்து தண்ணீர் உறிஞ்சப்படுகின்றதா என ஆய்வு செய்து, அவ்வாறெனில் மேற்கண்ட உணவகத்தின் மீது தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், உணவகத்திற்கு வந்து செல்லும் வாகனங்களுக்கு உரிய வாகன நிறுத்துமிடம் ஏற்படுத்திட உரிய அறிவிப்பு வழங்கிடவும் மேற்கண்ட உணவகத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கான தொழில் வரி, வணிக கட்டிடத்திற்கான சொத்துவரி முறையாக விதிக்கப்படுகின்றனவா என ஆய்வு செய்தும்,

மேலும், சாலையோரங்களிலோ அல்லது கால்வாய்/மழைநீர் வடிகால்வாய் போன்றவற்றின் மேல்ஆக்கிரமிப்பு செய்து சாலையோரத்திலேயே விறகு அடுப்பில் இரும்புக் கல் வைத்து உணவுகளை சுகாதாரமற்ற முறையில் தயார் செய்தும் மற்றும் உணவுகளை தயார் செய்ய விறகுகளை கொண்டு எரிக்கும் போது எழும் புகைனால் பொது மக்களுக்கு இடையூறாக இருந்தால் அதனை அகற்றி உரிய சுகாதார

முறையில் செயல்பட உத்தரவு வழங்குமாறு வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

இதனை உறுதிப்படுத்த உதவி இயக்குநர் பேரூராட்சிகள் (விழுப்புரம்) அறிவுறுத்தப்படுகிறார். The Director of Town Panchayats should obtain an action taken report from the Asst,. Director of Town Panchayat within one month and forward to this office early.

2024–ஆம் ஆண்டு ஜனவரி 04–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. G. வெங்கடேஷ்,
எண் 233, L.F. ரோடு
கச்சிராயப்பாளையம்,
சின்னசேலம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
வடக்கனந்தல் பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032